சுருக்கம்

தமிழ் வளர்ச்சித் துறை – விருதுகள் – "சிங்கார வேலர் விருது" என்ற பெயரில் புதியதாக விருதினைத் தோற்றுவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (தவ 1–2) துறை

அரசாணை (நிலை) எண்.141

007283

நாள் 18.08.2017
ஹேவிளம்பி, ஆவணி–2
திருவள்ளுவராண்டு 2048

படிக்க:-

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித ந.க.எண். தமிழ்–1/6059/2017, நாள்.20.07.2017.

-----

ஆணை:

19.07.2017 அன்று, சட்டமன்றப் பேரவை விதி 110–இன் கீழ் சட்டமன்ற பேரவையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

> "தமிழில் அறிவியல் கருத்துக்களை நூலாக எழுதுபவர்களிலும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும், சமத்துவ கொள்கைக்காகவும், தொழிலாளர் நலனுக்காகவும் போராடுபவர்களிலும் சிறந்த ஒருவருக்கு தமிழ் வளர்ச்சித்துறை சார்பாக 'சிங்காரவேலர் விருது' ஆண்டுதோறும் சித்திரை தமிழ்ப் புத்தாண்டு விருதுகளோடு வழங்கப்படும்"

2. மேற்படி அறிவிப்பு தொடர்பாக, மேலே படிக்கப்பட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதத்தில், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்கள் (18.02.1860 – 11.02.1946) ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு எதிராக தம் வழக்கறிஞர் தொழிலையே துறந்த பெருந்தகை, தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுத்தவர் என்றும், அவர்கள் நலனுக்காகப் பல போராட்டங்களில் பங்கேற்றவர் என்றும், இந்திய பொதுவுடைமை இயக்கத்தின் தந்தை என்றும், இந்திய தொழிற்சங்க இயக்கத்தின் முன்னோடி என்றும், அறிவியல் தமிழறிஞர் என்றும், பொதுச் சொத்துகள் மக்கள் நலனுக்காகப் பயன்பட வேண்டும் என்கிற பொதுவுடைமைக் கருத்தை வலியுறுத்தியவர் என்றும், "பொதுவுடைமை இயக்கத்தின் விதிகள் மனிதநேயத்துக்கு இசைவானது" என்று வலியுறுத்தியவர் என்றும், அவரது பெயரில் வழங்கப்படும் சிங்காரவேலர் விருது பெறுபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் ஒரு சவரன் தங்கப் பதக்கமும், தகுதியுரையும் வழங்கி பொன்னாடை அணிவித்து சிறப்பிக்கப் பெறலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

3. அரசின் கவனமான பரிசீலனைக்கு பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் 19.07.2017 அன்று சட்டமன்றப் பேரவை விதி 110–இன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, "சிங்காரவேலர் விருது" என்னும் பெயரில் புதிய விருதினை தோற்றுவித்து, தமிழில் அறிவியல் கருத்துக்களை நூலாக எழுதுபவர்களிலும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும், சமத்துவ கொள்கைக்காகவும், தொழிலாளர் நலனுக்காகவும்

போராடுபவர்களிலும் சிறந்த ஒருவரை ஆண்டுதோறும் தெரிவு செய்து, ஒவ்வோராண்டும் சித்திரைத் திருநாள் தமிழ்ப்புத்தாண்டு அன்று இவ்விருதினை வழங்கவும், இவ்விருதுக்குத் தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு விருதுத்தொகையாக ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மற்றும் ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதியுரை, பொன்னாடை மற்றும் தங்குமிடம் செலவு, போக்குவரத்துக் கட்டணம், சிற்றுண்டி, உணவு ஆகியவற்றிற்கு ரூ.35,000/– என மொத்தம் ரூ.1,35,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) செலவினத்தில் மேற்கொள்ள அரசு ஆணையிடுகிறது.

4. மேலும் நடப்பு நிதியாண்டிற்கான சித்திரை தமிழ்ப் புத்தாண்டு முடிவுற்றதால், இவ்விருது எதிர்வரும் சித்திரைத் திருநாள் தமிழ்ப் புத்தாண்டு அன்று வழங்குவதற்கேதுவாக, 2018–2019–ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு தொடர்பான கருத்துரு அரசுக்கு அனுப்பும்போது, மேற்படி விருது தொடர்பான செலவினத்திற்கும் சேர்த்து நிதி ஒதுக்கீடு சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பில் கோர தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரப்பற்ற குறிப்பு எண்.42345/நிதி(தவ(ம)செ)/2017, நாள்.11.08.2017–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. வெங்கடேசன்
அரசுச் செயலாளர் (மு.கூ.பொ.)

பெறுநர்

இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு) ,சென்னை–8.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை.9/18.

நகல்:

மாண்புமிகு அமைச்சர் (இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப்பண்பாடு) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்(தவ(ம)செ) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18/08/2017
பிரிவு அலுவலர்
18-8-17